செ.வெ. எண். 110

நாள் :01–02–2012

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் முக்கூர் திரு.என். சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் இன்று (01.02.2012) தகவல் தொழில்நுட்பவியல் துறை குறித்த கலந்தாய்வுக்கூட்டம் நடைபெற்றது.

தகவல் தொழில்நுட்பவியல் துறையின் செயல்பாடுகள் மற்றும் துறையின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்த விரிவான ஆய்வினை மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் மேற்கொண்டு, அப்பணிகளை விரைவுபடுத்திட அறிவுறுத்தினார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழக அரசுத் துறைகளில் மின்ஆளுமைத் திட்டங்களை செயல்படுத்தி, அதன்மூலம் பொதுமக்கள் இணையதளம் வாயிலாக அரசின் சேவைகள் அனைத்தையும் தத்தம் இருப்பிடத்திலிருந்தே பெறத்தக்க வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

எல்காட் நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்பவியல் பூங்காக்களில் காலியாக உள்ள இடங்களை நிரப்புவதற்குத் தீவிர நடவடிக்கைகளை எடுக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் மூலம் தமிழ் மொழிக்கான மென்பொருட்களை அதிக அளவில் உருவாக்கி, அதன் மூலம் கணினியில் தமிழ்மொழியின் பயன்பாட்டினை அதிகரிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்படி அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் தகவல் தொழில்நுட்பவியல் துறையின் முதன்மைச் செயலாளர் (பொறுப்பு) திரு.ரமேஷ் குமார் கன்னா, இ.ஆ.ப., தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் (எல்காட்) மேலாண்மை இயக்குநர் மற்றும் தமிழ்நாடு மின்ஆளுமை முகமையின் தலைமை செயல் அலுவலர் திரு.அதுல் ஆனந்த், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு கேபிள் தொலைக்காட்சி நிறுவனத்தின் பொது மேலாளர் திரு. தட்சிணாமூர்த்தி, தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் இயக்குநர் பேராசிரியர் திரு.பி.ஆர். நக்கீரன் மற்றும் துறையின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

• • •

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**